செ.வெ.எண்.15 நாள். 06.04.2017

# பத்திரிக்கை செய்தி

## கல்வித்துறை மற்றும் வேலைவாய்ப்புத் துறையும் இணைந்து நடத்திய தொழில்நெறி வழிகாட்டும் கருத்தரங்கு

10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் கருத்தரங்கு நிகழ்ச்சி திருநெல்வேலி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகம், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும் இணைந்து கீழ்க்காணும் மையங்களில் 06.04.2017 அன்று நடத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியினை தூய சவேரியர் மேல்நிலைப் பள்ளியில் வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் திரு.மு.கருணாகரன் அவர்கள், துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்வித் துறை அலுவலர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலர்களும் பிற துறைகளிலிருந்தும் சிறப்பு மிக்க வல்லுநர்களும் கலந்து கொண்டுள்ளனர்:

1. எவரெஸ்ட் பாலிடெக்னிக் கல்லூரி, கடையநல்லூர்
2. தாமிரபரணி இன்ஜினீயரிங்க கல்லூரி, தாழையூத்து
3. பிளாரன்ஸ் சுவைன்சின் காது கேளாதோர் பள்ளி, பாளையங்கோட்டை.
4. தூய சவேரியர் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை.
5. எஸ்.எம்.ஏ ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செங்கோட்டை.
6. யு.எஸ்.பி. பாலிடெக்னிக் கல்லூரி, கொடிகுறிச்சி, தென்காசி.
7. எம்.பி.எல். பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கல்லணை.

தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு உயர்கல்வி, போட்டித்தேர்வுகள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்ட செயல்பாடுகள், இலவச பயிற்சி வகுப்புகள், தொழிற்பயிற்சி நிலைய கல்வி முறைகள், தொழில்நுட்பக் கல்வி விவரங்கள், இலவச திறன் மேம்பாட்டு மைய பயிற்சிக்கான வழிமுறைகள், சுயவேலைவாய்ப்பு மற்றும் அயல்நாட்டு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றிய அறிவுரைகள் வேலைவாய்ப்புத் துறை அலுவலர்கள் மற்றும் சிறப்பு வல்லுநர்களால் வழங்கப்பட்டது. தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கை முறையினை, சீரிய முறையில் அமைத்திட அவர்களுக்கு புதிய கல்வித் திட்டங்கள், பயிற்சி முறைகள் மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டு வாழ்வில் பயனடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் நடத்தப்பட்டுள்ளது. விழாவில் கலந்து கொண்ட 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வேலைவாய்ப்புத் துறை இயக்ககத்தால் தயாரிக்கப்பட்ட கையேடும் வழங்கப்பட்டது.

இத்தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி